உ

**புதுச்சேரி அரசு**

**இந்து சமய நிறுவனங்கள் துறை**

**ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம்**

**திருநள்ளாறு**

**எண்:நிஅ(கோ)/ஸ்ரீதசுதே/திரு/2025/ 370** **தேதி: 05.09.2025**

**ஏலஅறிவிப்பு**

இத்திருக்கோவிலிற்கு பாத்தியப்பட்ட கீழ்கண்ட இனம் உரிமம் அனுபவித்துக் கொள்ள விருப்பம் உள்ளவர்கள் கீழ்குறிப்பிட்டுள்ள டேவணித்தொகையை கீழ் குறிப்பிடப்பட்ட விபரப்படி செலுத்தி ஏலம் கேட்கலாம்.

| | |
|---|---|
| ஏலம் விடப்படும் இடம் | தேவஸ்தான அலுவலக வளாகத்தில் அமையப்பெற்றுள்ள நிர்வாக அதிகாரியின் அறை. |
| ஏலம் விடப்படும் நாள் மற்றும் நேரம் | 23.09.2025 - காலை 10.00 மணி |
| இனம் | திருநள்ளாறு ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமான ஸ்ரீ நளன் கலிதீர்த்த விநாயகர் ஆலயத்தில் சிதறு தேங்காய் சேகரம் செய்து கொள்ளும் உரிமம் மற்றும் தூய்மையாக பராமரித்தல். |
| காலம் | 01.10.2025 முதல் 30.09.2026 முடிய ஒரு வருட காலம் |
| டேவணித்தொகை | ரூ.1,00,000/- ( ரூபாய் ஒரு இலட்சம் மட்டும் ) |
| டேவணித்தொகை செலுத்த வேண்டிய கடைசி தேதி மற்றும் நேரம் | 22.09.2025, மாலை 05.45 மணிக்குள் |

**ஏல நிபந்தனைகள்:**

1. ஏலத்திற்கான டேவணித்தொகை **ரூபாய்.1,00,000/- ( ரூபாய் ஒரு இலட்சம் மட்டும் )** நிர்வாக அதிகாரி ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம் திருநள்ளாறு-என்ற பெயரில் வங்கி கணக்கில் செலுத்தத்தக்க வகையில் வங்கிவரை வோலையாக (Demand Draft) பெறப்பட்டு, 22.09.2025 **அன்று மாலை** 05.45 மணிக்குள் தேவஸ்தான அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.

2. ஏலம் உறுதிசெய்யப்பட்டவர் 23.09.2025 **அன்று மாலை** 5.45 மணிக்குள் மேற்படி தேவஸ்தான அலுவலகத்தில் ஏலத்தொகை முழுவதையும், நிர்வாக அதிகாரி ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருநள்ளாறு என்ற பெயரில் ஏலம் எடுத்தவரால் பெறப்பட்ட, வங்கி வரைவோலை வங்கி கணக்கில் செலுத்தத்தக்க வகையில் தேவஸ்தான அலுவலகத்தில் செலுத்த வேண்டும் (அல்லது) ஏலம் எடுத்தவர் இணைய வழிப்பணம் செலுத்துதல் (NEFT / RTGS) வழியாக இத்தேவஸ்தானத்தில் செலுத்தப்படவேண்டிய வங்கி கணக்கு விபரங்கள் அலுவலகத்தில் தெரிந்து கொண்டு செலுத்த வேண்டும். அவ்வாறு செய்ய தவறும் பட்சத்தில் ஏலம் ரத்து செய்யப்பட்டு மறு ஏலம் உடனே அறிவிக்கப்படும் மற்றும் டேவணித்தொகையையும் மறு ஏலத்தில் பங்கேற்கும் தகுதியையும் இழக்க நேரிடும்.

3. புதுச்சேரி வணிகவரித்துறையினரால் கோரப்படும் சரக்கு மற்றும் சேவை வரியினை ஏலதாரரே செலுத்த வேண்டும்.

4. மேற்படி ஏலம் மேலே குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் தொடங்கி ஏலக்கேள்வி முடியும் வரை நடைபெறும்.

5. ஏலக்கேள்வி ஒவ்வொன்றும் **ரூ**.5000/- **மற்றும்** **ரூ**.5000/-**த்தின்** மடங்குகளில் இருத்தல்வேண்டும்.

(signature)

6. ஏலத்தில் பங்குகொள்ள டேவணித்தொகை செலுத்தியவர் மட்டுமே, ஏலத்தில் பங்கேற்க வேண்டும்.

7. ஏலம் நடைபெறும் அறைக்கு அலைபேசி எடுத்துவர அனுமதியில்லை.

8. ஏல நடைமுறை முடியும் வரையில் ஏலம் நடைபெறும் அறையிலிருந்து ஏலதாரர்கள் வெளியில் செல்ல அனுமதியில்லை.

9. டேவணித்தொகையாக செலுத்தும் வங்கி வரைவோலையில் குறிப்பிட்டுள்ள நபர் மட்டுமே ஏலம் கேட்கவோ / பங்கு கொள்ளவோ அனுமதிக்கப்படுவர்.

10. ஏலத்தில் கலந்து கொள்பவரில் யார் அதிக தொகைக்கு ஏலம் கேட்பவரோ, , அவரது ஏலம் நிர்வாகத்தால் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், அந்த நபருக்கு உரிமம் வழங்கப்படும். ஏலத்தொகை ஏற்கபடாதவர்களுக்கு அவரவர் செலுத்திய டேவணித்தொகை (வங்கி வரைவோலை) திரும்ப அளிக்கப்படும்.

11. ஏலம் எடுத்தவர் டேவணித்தொகையாக செலுத்தும் ரூ.1,00,000/- ( **ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்** ) காப்பீட்டு தொகையாக வைத்துக் கொள்ளப்படும். ஒப்பந்தகாலம் முடிந்தவுடன் திருப்பி அளிக்கப்படும்.

12. ஸ்ரீ நளன் கலிதீர்த்த விநாயகர் ஆலயத்தில் சிதறு தேங்காய் சேகரிப்பதற்கான உரிமைகாலம் 01.10.2025 **முதல்** 30.09.2025 வரை மட்டுமே. எக்காரணம் கொண்டும் கால நீட்டிப்பு செய்யப்படமாட்டாது.

13. ஏலதாரர் தன் சொந்த பொறுப்பில் சிதறு தேங்காய் உடைக்கும் இடத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். துப்புரவு தொடர்பான எந்த பொருட்களும் தேவஸ்தானத்திலிருந்து வழங்கப்படமாட்டாது.

14. துப்புரவு தொடர்பான குறைபாடுகள் ஏற்படும் பட்சத்தில் அபராதமாக ஒரு தடவைக்கு ரூ.500/- வீதம் பிடித்தம் செய்யப்படும். ஏலகாலம் முடிந்த பின்னர், அபராதத்தொகை ஏதாவது பிடித்தம் செய்யப்பட்டிருப்பின், அதனை கழித்துக்கொண்டு மீதமுள்ள காப்பீட்டுத்தொகை ஏலதாரருக்கு திரும்ப அளிக்கப்படும்.

15. ஏலதாரர் மேற்படி ஏலகாலத்தில் ஏற்படும் எவ்வித இயற்கை இடர்பாடுகள் மற்றும் அரசு அறிவிக்கும் ஊரடங்கு போன்ற நடைமுறையால் ஏற்படும் நஷ்டத்திற்கு தேவஸ்தானம் பொறுப்பேற்காது. எந்தவித இழப்பீட்டு தொகையும் கோரமுடியாது மற்றும் எவ்வித ஏலகால நீட்டிப்பும் வழங்கப்படமாட்டாது.

16. ஏலத்தை நடத்தவும் ரத்து செய்யவும் தேவஸ்தான நிர்வாக அதிகாரி அவர்களுக்கு முழு உரிமையுண்டு. அவரின் தீர்ப்பே இறுதியானது.

கு. அருணகிரிநாதன்

நிர்வாகஅதிகாரி

1. Notice Board
2. Thirunallaru Temple Website (www.thirunallarutemple.org)